# இணைய ஆதாயக் குற்றவாளிகள்!

**கோ**வை சிறுமி பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட விவகாரத்தில் த.வெ.க ஆதரவு சமூக வலைதள மாஃபியா தனது கோர முகத்தை இன்னும் உக்கிரமாக காட்டிக்கொண்டிருக்கிறது. 'சட்டம் ஒழுங்கு சீர்குலைவு' என்ற ஒற்றை வாக்கியத்தை வைத்துக்கொண்டுதான் தமிழ்நாட்டில் நடந்த தனிநபர் குற்றங்களை யெல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பாக்கி விஜய் பிரச்சாரம் செய்தார். இத்தனைக்கும் எல்லாக் குற்றங்களிலும் குற்றவாளி கள் உடனுக்குடன் கைது செய்யபட்டு தண்டனையும் பெற்றுத் தரப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பலாத்கார சம்பவம் ஒரு உதாரணம். இருந்தும் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பே இல்லை என்ற பொய்யை த.வெ.கவின் டிஜிட்டல் மாஃபியா இடைவிடாமல் பரப்பியது. அந்தப் பொய்பிரச்சாரத்திற்கு பலியாகி கணிசமான பெண்கள் ஒரு பீதியுடன் த.வெ.கவிற்கு வாக்களித்தார்கள். தேர்தலில் த.வெ.க வென்றதும் ' இப்போதுதான் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்' என சில பெண்களை பேசவைத்துப் பரப்பினார்கள்.

ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்கூட தாங்கவில்லை. நெஞ்சை உலுக்கும் பலகொடூர சம்பவங்கள் தொடர்ச்சியாக தமிழகமெங்கும் அரங்கேறிவருகின்றன. 'என்ன காரணங்கூறி ஆட்சிக்கு வந்தீர்களோ அதே குற்றங்கள்தான் இப்போதும் நடக்கின்றன, உங்கள் பதில் என்ன?' என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால் இதற்கு மட்டுமல்ல எதற்குமே முதலமைச்சர் பதில் அளிக்க மாட்டார். அமைச்சரிடம் கேள்வி கேட்டால் கேமிரா முன் வாய் மூடிச் சிரிப்பார். காவல்துறை அதிகாரிகள் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

ஆனால் கடந்த காலத்தில் த.வெ.க இழைத்த கரூர் நெரிசல் மரணங்கள் போன்ற குற்றங்களையெல்லாம் தி.மு.க. மேல் திசை திருப்பி ருசிகண்ட சமூக வலைதள நாசகார கும்பல் ஆட்சிக்கு வந்தபின்னும் அதே உத்தியைக் கையாண்டு மக்களை திசை திருப்பும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. இந்த முறை தி.மு.கமீது மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களின்மீதும் தன் கோரப்பற்களை நீட்டத் தொடங்கியிருக்கிறது. எந்த போலி நாடகங்கள்மூலம் ஆட்சிக்கு வந்தார்களோ அதே போலி நாடகங்கள் மூலம் தங்களது கையாலாகாத அரசை காப்பாற்றிவிடலாம் என்று நம்புகிறார்கள்.

கொல்லப்பட்ட கோவைச் சிறுமியின் அம்மாவின் ஒழுக்கத்தை கேள்விக்குள்ளாக்கி அவர்தான் இந்தக் குற்றத்திற்கு காரணம் என்பது போன்ற காணொளிகளை பரப்பி வருகிறார்கள். இன்னொரு புறம் குற்றம் இழைத்த நபரை தி.மு.கவோட சம்பந்தப்படுத்த முயற்சிக்கும் போலிக் காணொளிகள். அதே சமயம் சிறுமியின் மரணம் தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் காவல்துறை அதிகாரிகள் சிரிக்கும் காணொளி வெளிவந்தால் அது ஏ.ஐ. காணொளி எனப் பரப்புவது. அதாவது பொய்யை உண்மை எனக் காட்டுவது. உண்மையை பொய் எனக்காட்டுவது. இதேதான் ஆரம்பம்முதல் நடந்துகொண்டிருக்கிறது.

**எம்.எல்.ஏ.க்களின் போலிக் கல்விச் சான்றிதழ்கள், ஏற்கனவே நடந்துகொண்டிருக்கும் திட்டங்களை புதிதாக அறிவிப்பதுபோல ஸ்டிக்கர் ஒட்டுவது, கஜானா காலி என பொய்சொல்லி விட்டு எதிர்ப்பு வந்ததும் மறுநாளே மகளிருக்கும் மாணவர்களுக்கும் மாதாந்திர தொகையினை அளிப்பது, அரசு எந்த அரசாணையும் போடாத பொய் அறிவிப்புகளை ( அரசு அலுவலகத்தில் லஞ்சம் வாங்கியவர்களை படம் பிடித்தால் ஒரு இலட்சம் பரிசு) இன்ஸ்டாகிராமில் பரப்புவது, 'ரீல்ஸ்'க்காக அத்து மீறி அரசு அலுவலகங்களிலும் மருத்துவமனையிலும் சட்டவிரோதமாக த. வெ.கவினர் ஆய்வுகளில் ஈடுபடுவது, அமைச்சர் பெட்டிக் கடையில் போய் ' முறுக்கின் மனுஃபாக்சரிங் டேட்' எனக் கேட்டு அதிரடி சோதனையில் ஈடுபட்டு 'ரீல்ஸ்' எடுப்பது, தலைமைச் செயலகத்தில் முதல்வர் அலுவலகத்திலிருந்தே 'ரீல்ஸ்'களை வெளியிடுவது என இந்த இருபது நாட்களில் என்னதான் நடக்கவில்லை இந்தத் தமிழ் நாட்டில்?**



**மனுஷ்ய புத்திரன்**
ஆலோசகர்,
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி

மின்வெட்டால் தமிழ்நாடே தத்தளித்துக் கொண்டிருக்கும்போது இதற்குக் காரணம் 'மின் துறையில் சில கறுப்பு ஆடுகள்தான் காரணம்' என பழியை பிறர்மேல் போட்டு தப்பி ஓடுகிறார்கள். ஆனால் மின் வெட்டு அன்றாட வாழ்க்கையை சீர் குலைக்கும் கடும் துயரம். கரூர் சம்பவத்தைபோல இதையும் கையாளலாம் என்று திட்டமிட்டால் மக்கள் கடும் பதிலடி கொடுப்பார்கள்.

தமிழ்நாட்டின் இன்றைய நிலை அரசாங்கம் என்ற ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாகியிருக்கிறது. எல்லாத் துறைகளும் முடங்கிப்போயிருக்கின்றன. அரசு அதிகாரிகளுக்கு எந்தத் திசையில் செல்வது என்று தெரியவில்லை. பல்வேறு நிழல் அதிகார மையங்கள் அரசு எந்திரத்தை ஆட்டிப் படைக்கின்றன. அமைச்சர்களுக்கு அதிகாரிகள்மேல் எந்தச் செல்வாக்கும் இல்லை. ஒரு அமைச்சருக்கு தான் வகிப்பது சுற்றுலாத் துறையா சுற்றுச் சூழல் துறையா என்பதுகூடத் தெரியவில்லை. தொழில்துறை அமைச்சர் எதிர்மறை செய்திகள் மூலம் தன்னை பிரபலப்படுத்துவதில் குறியாக இருக்கிறார். முதலீடுகள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியிருக்கின்றன. ஆறுமாதம் அவகாசம் கொடுத்து விமர்சிப் போம் என்றார்கள். அரை மாதத்திலேயே இந்த அரசின் சாயம் வெளுத்துவிட்டது.

ஒரு புதிய அரசில் தடுமாற்றங்கள் இருக்கலாம். போதாமைகள் இருக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களையும் நியாயம் கேட்பவர்களையும் ' கேரக்டர் அசாஷினேசன்' செய்வதன் மூலமே தாங்கள் தொடர்ந்து ஆட்சி செய்யலாம் என நினைத்தால் அதைவிட மூடத்தனம் வேறு எதுவும் இல்லை. அன்றாடம் பலபிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் மக்களின் கேள்விகளுக்கு பதில் தேவை. அவதூறுகளும் பொய்களுமே இதற்கு பதில் என்றால் வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகம் அது.

**சில உடனடி ஆதாயங்களுக்காக இந்த அரசை தூக்கிச் சுமப்பவர்கள் எல்லாவற்றுக்கும் வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள். இவர்கள் தி.மு.கவோடு இருந்தபோது ஏதாவது பிரச்சினை வந்தால் அரசுக்கு எத்தகைய நெருக்கடிகளைக் கொடுத்தார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. பதில் அளிக்கும் முதலமைச்சரிடம்தான் கேள்வி கேட்க முடியும். இறுகிய மௌனத்தோடு இருப்பவரிடம் என்ன கேட்க முடியும்? அவரது ஆட்சியை காப்பாற்றும் திருப்பணியை மட்டும் செய்துகொண்டிருப்பார்கள்.**

த.வெ.கவின் இந்த சமூக வலைதள கும்பல் ஒரு மிகப்பெரிய சமூக விரோத கும்பலாக வளர்ந்திருக்கிறது. இன்றைய தகவல் தொழில்நுட்ப சட்டபடியே இவர்கள் மிகக்கடுமையாக தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை செய்து வருகிறார்கள். நேற்று குழந்தைகளை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தார்கள். இன்று ஒரு குழந்தைக்கு நடந்த கொடுமைக்கு அந்தக் குழந்தையின் தாயினது ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். த.வெ.க. ஆதரவு இணைய மாஃபியாவின் இந்தக் கொடும் செயல்கள் தொடர்ந்து அம்பலப்படுத்தப்படவேண்டும், இவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும். இன்ஃப்ளுயன்ஸர்கள் என்ற பெயரில் செயல்படும் இந்த இணைய கூலிப்படையினர் ஆதாயக் கொலையாளிகளைவிட ஆபத்தானவர்கள்.

## த.வெ.க.வின் "வாய்மூடி முதல்வர்" ஆட்சியில்

# மதுரையில் 17 வயது சிறுவன் வெட்டிக் கொலை!

## ரவுடிகள் அட்டகாசம்!

மதுரை, மே 26 -

*மதுரை மீனாட்சியம்மன் கோவிலருகே 17 வயது சிறுவன் படுகொலை உடலை முதல் தளத்தில் இருந்து கீழே வீசிச் சென்ற ரவுடி கும்பல்!*

தமிழகத்தின் முக்கியப் பண்பாட்டு மையமாக விளங்கும் மதுரை மாநகரின் மையப்பகுதியில், அதுவும் உலகப் புகழ்பெற்ற மீனாட்சி அம்மன் கோவில் அருகிலேயே அரங்கேறியுள்ள துணிகரக் கொலைச் சம்பவம் ஒட்டுமொத்த தென்மாவட்டங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் 17 வயது சிறுவன் ஒருவன் ரவுடி கும்பலால் மிகக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளான்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தை ஒட்டி, தூங்காநகரத்திற்கு வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக மாநகராட்சிக்குச் சொந்தமான நவீன வாகன காப்பக வணிக வளாகம் இயங்கி வருகிறது. இவ்வளாகத்தின் முதல் தளத்தில் உள்ள ஒதுக்குப்புறமான பகுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவில் 17 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது, நள்ளிரவு சுமார் 2 மணி அளவில் பயங்கர ஆயுதங்களுடன் அங்கு வந்த 5 பேர் கொண்ட ரவுடி கும்பல், தூங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறுவனைச் சூழ்ந்து கொண்டது. தப்பியோட முயன்ற அவனைக் கண்மூடித்தனமாகத் தலை, கழுத்து உள்ளிட்ட உடல் பாகங்களில் அந்தப் பயங்கரவாதக் கும்பல் கொடூரமாக வெட்டிச் சாய்த்தது.

அத்தோடு நிறுத்தாமல், ரத்த வெள்ளத்தில் துடிதுடித்துச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த அந்தச் சிறுவனின் உடலை, அந்த வணிக வளாகத்தின் முதல் தளத்தில் இருந்து நேராகக் கீழே வீசி எறிந்துவிட்டு, எவ்வித அச்சமுமின்றி அந்த ரவுடி கும்பல் வேகத்தில் தப்பியோடியது.

நேற்று அதிகாலை நேரத்தில் வணிக வளாகத்தின் தரைத்தளத்தில் சிறுவன் ரத்த வெள்ளத்தில் சடலமாக எறியப்பட்டுக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பாதுகாப்புப் பணியாளர்கள், உடனடியாக மதுரை விளக்குத்தூண் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வேகத்தில் விரைந்து வந்த மாநகரக் காவல் துணை ஆணையர் மற்றும் போலீஸார், சிறுவனின் உடலைக் கைப்பற்றிப் பிரேதப் பரிசோதனைக்காக மதுரை அரசு இராஜாஜி பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், கொடூரமாகக் கொல்லப்பட்ட அந்தச் சிறுவன் மீது ஏற்கனவே மதுரை மாநகரின் பல்வேறு காவல் நிலையங்களில் வழிப்பறி, திருட்டு மற்றும் அடிதடி உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது வெளிச்சத்திற்கு வந்தது.

கஞ்சா விற்பனை மற்றும் ரவுடி கும்பல்களுக்கு இடையே நிலவி வரும்முன் பகை அல்லது பழிவாங்கும் நோக்கில் இந்த கொடூரக் கொலை அரங்கேறியிருக்கலாம் என்று போலீஸார் பலமாகச் சந்தேகிக்கின்றனர். வணிக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமரா காட்சிகளைத் தீவிரமாக ஆய்வு செய்து வரும் விளக்குத்தூண் போலீசார், தப்பியோடிய 5 பேர் கொண்ட கொலையாளிகளைப் பிடிக் கத் தனிப்படை அமைத்து வேட்டையில் இறங்கியுள்ளனர். இச்சம்பவத்தால் மீனாட்சி அம்மன் கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார்
### மே 26 (1989)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.


"தென்னாட்டு போர்க்களங்கள்" உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பிரெஞ்சு உள்ளிட்ட பத்து மொழிகளை நன்கு கற்றறிந்தவர்.

"தோய்ந்த புலமையாலும், ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் அறிஞர்கள் பலர் தொடமுடியாத எல்லைகளையெல்லாம் ஆராய்ந்து விரிவாக எழுதியவர் நமது பன்மொழிப் புலவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கலில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




## சட்டமன்றத் தொகுதி – கள ஆய்வு!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து ராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிவிப்பின்படி கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., இ. பரந்தாமன் ஆகியோர் கீழ்க்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

### ஆற்காடு சட்டமன்றத் தொகுதி - 27.05.2026

| வ.எண் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | நேரம் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஆற்காடு நகரம் | காலை 10.00 | இந்திராணி ஜானகிராமன் முதலியார் திருமண மண்டபம் |
| 2 | திமிரி கிழக்கு<br>கலவை பேரூர் | காலை 12.00 | குப்புடிசாத்தம், திமிரி ஒன்றியம் |
| 3 | ஆற்காடு கிழக்கு | பிற்பகல் 3.00 | ஜனசங்க கட்டிடம், ஆற்காடு |
| 4 | திமிரி பேரூர்<br>விளாப்பாக்கம் பேரூர் | பிற்பகல் 4.00 | K.B.J. மஹால், திமிரி |
| 5 | திமிரி மத்திய<br>திமிரி மேற்கு | மாலை 5.00 | பெருமாள் தெரு, திமிரி |
| 6 | கணியம்பாடி<br>வேலூர் மாநகரம் | மாலை 6.00 | கணியம்பாடி |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18, நாள்: 25,05,2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மெட்டல் பாக்ஸ் மு.நடராசன்
### மே 26 (2003)



கழகம் துவக்கிய காலத்திலேயே உறுப்பினராகி, தமது பகுதியில் மன்றத்தை துவக்கி கழகப் பணியாற்றியவர்.

இராயபுரம் பகுதி பிரதிநிதி, பகுதி அவைத் தலைவர் மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையில் தொ.மு.ச. அமைப்பை உருவாக்கி அதன் பொதுச்செயலாளராகவும், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**